2) காலம் : கி.பி.17ம் நூற்றாண்டு

3) செய்தி : ரெங்கம் பல்லவராயர் அணை கட்டியமைக்குரியது.

1. மகாராச மானியரா
2. ய ரெங்கம் பல்ல
3. வராயறவர்களால் வி
4. ரோதுகிருது ளு பிற
5. ட்டாசி மீ 23.உ.வரையி
6. ல் யிந்த அணை கட்டினது
7. குமாஸ்(தா) ரெங்குப் பிள்ளை

கிபி 1898 முதல் 1928 வரையிலான காலகட்டத்தில் புதுக்கோட்டை சமஸ்தான திவான் மற்றும் ரீஜன்ட் ஆகிய பதவிகளை, மார்த்தாண்ட பைரவ பல்லவராயரின் சகோதரர் விஜய ரகுநாத ராய பல்லவராயர் வகித்து சிறப்பித்தார். (manual of pudukkottai state vol 2 part 1 949-950)



950 LIST OF ADMINISTRATORS

Dewans.—cont.

Rájkumár Vijaya Raghunátha Durai Rája. (A. Venkat Row, *Acting Councillor*)	January—February 1899.
Dewan Bahadur S. Venkataramadas Naidu. (On leave between September 11, 1905 and October 10, 1905).	February 18, 1899 to March 1909.
Rajkumar Vijaya Raghunatha Durai Raja—*Councillor* till July 1908. (*Acting Dewan between September 11, 1905 and October 10, 1905.—Mr. C. Rajagopala Pillai acted as Councillor during this period*).	

State Council.—

Mr. (now Sir) G. T. H. Bracken, I. C. S., *Superintendent of the State.*	March 1909 to April 10, 1910.
Rájkumar Vijaya Raghunatha Durai Rája, *Dewan.*	
Mr. C. Rajagopala Pillai, *Councillor, ex-officio.*	
Mr. A. M. A. C. Galletti-di-Cadilhac, I. C. S., *Superintendent—acting.*	April 11, 1910 to June 28, 1910.
Rájkumar Vijaya Raghunatha Durai Rája, *Dewan.*	
Mr. C. Rajagopala Pillai, *Councillor.*	
Mr. G. T. H. Bracken, I. C. S., *Superintendent.*	June 29, 1910 to February 23, 1913.
Rájkumar Vijaya Raghunatha Durai Rája, *Dewan.* (*On leave from September 16, 1910 to December 18, 1910*).	
Mr. C. Rajagopala Pillai, *Councillor.* (*Acting Dewan from September 16, 1910 to December 18, 1910*).	

Manual of pudukkottai state vol 2 part 1



Potrait of vijaya raghunatha pallavarayar: Pudukkottai museum

மேல அரண்மனை ஜாகீர்தாரான ராஜ்குமார் ராமச்சந்திர தொண்டைமான், பெருங்களூர் பல்லவராயர் வழிவந்த அண்ணாச்சாமி பல்லவராயரின் மகளான மதுராம்பாள் ஆயி என்பவரை திருமணம் செய்தார். மதுராம்பாள் ஆயி 1920 ல் மரணமடைந்தார்.

இதற்கு பிறகு ராஜ்குமார் ராமச்சந்திர தொண்டைமான், பிலாவிடுதியை சேர்ந்த குழந்தைசாமி பல்லவராயர் அவர்களின் மகளான ஜானகி ஆயி என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு பிறந்தவரே புதுக்கோட்டை யின் கடைசி மன்னர் 1 தொண்டைமான்.(Manual of pudukkottai state vol 2 part 1 pg 896)

1935 ல் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்து எழுதப்பட்ட கடிதத்தில் போரம் பல்லவராயர் வழிவந்த ராமசாமி பல்லவராயரை , புதுக்கோட்டை மன்னருக்கு முதல் மாமன் என குறிப்பிடப்பட்டுள்ளது.



No. 10515 of 1934

24-3-1935.

28

இராசாவுக்கு.

தாங்கள் மகாராஜாவுக்கு [illegible]
வர்களுக்கு [illegible] ஆகிய
த்தையும் மிலிடரி சர்தார் ஆபீசரிடத்
யுத்தையும் கொடுத்து தங்களுக்கு
மந்திராலோசனைக்கு [illegible]
படுத்தி வேண்டுமாய்க் கோரி [illegible]
5-12-34 தேதியிட்டிருக்கிறதாக [illegible]
க்கப்படுகிறது.

தாங்கள் கோரியபடி தங்களுக்கு
மந்திராலோசனைக்கு [illegible]
னுப்பிவைப்பதற்கு [illegible]
தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

R. Krishnaswamy
28 3 35
Assistant Administrator

DK
1935

To

M.R.Ry.

A. Ramaswamy Pallavaraiyan Avl

Military Sardar.

Avaniapuram Palli.

ராமசாமி பல்லவராயருக்கு எழுதப்பட்ட கடிதம்

புதுக்கோட்டை மன்னராக மீண்டும் பல்லவராயர்

புதுக்கோட்டையை கிபி 1839-1886 காலகட்டத்தில் ஆட்சி செய்த மன்னர் ராமசந்திர தொண்டைமான், ஆண் வாரிசு இல்லாததால் தனது மகள் வயிற்று பேரனான மார்த்தாண்ட பைரவ பல்லவராயரை 1877 ல் தனது அரசியல் வாரிசாக தத்தெடுத்துக்கொண்டார்.

1875 டிசம்பர் 10ம் நாள் வேல்ஸ் இளவரசர், மதுரைக்கு விஜயம் செய்திருந்தபோது மன்னர் அவரை சந்தித்து உரையாடினார். இளவரசரின் வருகையின் நினைவாக மன்னருக்கு மெடல் ஒன்று பரிசளிக்கப்பட்டது. இங்கிலாந்தின் பேரரசியான விக்டோரியா ராணி ''மகாராணி'' என்ற விருதை சூட்டிக்கொள்ள இருந்ததை கொண்டாடும் வகையில், புதுக்கோட்டையில் 1877ல் ஒரு சிறப்பு தர்பார் கோலாகலமாக நடத்தப்பட்டது. ஆயுள் கைதிகள் பலர் விடுவிக்கப் பட்டனர்.

ராஜா ராமச்சந்திரத் தொண்டைமானுக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆகவே வாரிசாக ஒருவரை சுவீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் மன்னருக்கு ஏற்பட்டது.

மன்னரின் சகோதரர் திருமலைத் தொண்டைமானுக்கு பாலசுப்பிரமணிய ரகுநாதத் தொண்டைமான் என்ற குமாரர் இருந்தார். மன்னர் அவரை வாரிசாக எடுத்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மன்னர் தனது மூத்த மகளின் மகனை சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடிவு செய்தார்.

வாரிசு இல்லாதபோது சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் சிறப்பு உரிமையைத் தொண்டைமான் மன்னர்களுக்கு, ஆங்கிலேயே அரசு வழங்கி இருந்தது. அதன்படி சுவீகாரம் எடுத்துக் கொண்ட விவரத்தை ஆங்கிலேய அரசுக்கு தெரிவித்து அரசின் அங்கீகாரம் பெற வேண்டும். இந்த நடைமுறைப்படி, தனது மூத்த மகள் பிரகதாம்பாள் அம்மணியின் (கணவர் பெயர் குழந்தைசாமி பல்லவராயர்) மூன்றாவது மகன் மார்த்தாண்ட பைரவ பல்லவராயரை 1877ல் தனது வாரிசாக சுவீகாரம் எடுத்துக் கொண்டதை, பொலிட்டிக்கல் ஏஜண்ட் மூலம் ஆங்கிலேய அரசுக்குத் தெரிவித்து, அரசின் அங்கீகாரம் வேண்டப்பட்டது. 1878 ஜனவரி மாதம் 15ம் நாள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல், மார்த்தாண்ட பைரவப் பல்லவராயரை புதுக்கோட்டை மன்னர் சுவீகாரம் எடுத்துக் கொண்டதை அங்கீகரித்து ஆணை பிறப்பித்தார். மேலும் மன்னரது சகோதரர் மகனுடைய வாரிசு உரிமை வேண்டுகோளும் மறுக்கப்பட்டது. பட்டத்து இளவரசராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மார்த்தாண்ட பைரவ பல்லவராயர், பின்பு மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் என்றே அழைக்கப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்ட வரலாறு : தமிழக அரசு வெளியீடு

இப்பகுதி மக்களின் தொடர்புகளினால் ஏற்பட்ட அரசியல், மண உறவுகளின் காரணமாக தெலுங்கு மொழியின் செல்வாக்கும் உபயோகமும் குறைந்திருக்க வேண்டும். ஆனால் தெலுங்குமொழி அரச குடும்பத்தில் சில காரியங்களுக்கு தொடர்ந்து பயன்படுத்துவது வழக்கத்திலிருந்தது.

தொண்டைமான் மன்னர்கள் இப்பகுதியில் வாழ்ந்த பல்லவராயர் போன்றோருடன் மண உறவு கொண்டனர். இதன் பயனாக இப்பகுதியில் வாழ்ந்த பிற மக்களோடு இவர்களது தொடர்புகள் வலுப்பட்டன. எடுத்துக் காட்டாக, ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பல்லவராயர் இனத்தைச் சேர்ந்தவர். ஆனால் இவரும் தொண்டைமான் என்றே அழைக்கப்படுகிறார்.

மேற்கண்ட கருத்துக்களை சீர்தூக்கிப் பார்க்கும்போது, புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் (கல்வெட்டுகளிலே குறிப்பிடப்பட்டவர்களிலிருந்து) வேறுபட்ட தனியானதொரு கிளை மரபினர் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

3. ரகுநாதராயத் தொண்டைமான்

ரகுநாதராயத் தொண்டைமான் 1661-ல் தனது தந்தை வசமிருந்த கறம்பக்குடி, பிலாவிடுதி பகுதிகளின் பொறுப்பை ஏற்றார். அப்போது தஞ்சாவூரை அச்சுத விஜயராகவ நாயக்கரும், மதுரையை சொக்கநாத நாயக்கரும் ஆண்டுவந்தனர். ராமநாதபுரம் ரகுநாதத் தேவர் என்றழைக்கப்படும் திருமலை சேதுபதியின் பொறுப்பில் இருந்தது. தஞ்சையும், மதுரையும் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டதாக (பெயரளவில்) இருக்க, ராமநாதபுரம் மதுரைக்கு உட்பட்டிருந்தது. விஜயநகரப் பேரரசு குன்றியிருந்த நிலையில், பீஜப்பூர், கோல்கொண்டா, சுல்தான்களும் தமிழகத்தில் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர். ம்ராட்டியர் தங்களது ஆளுகைக்குத் தகுந்த பகுதியை இங்கு தேடிக் கொண்டிருந்தனர். குழப்பமும் கலவரங்களும் நிறைந்த இந்த சூழ்நிலையில்தான் தொண்டைமான்களின் ஆட்சி அரும்ப ஆரம்பித்தது. இந்த சூழ்நிலையிலும் தனது செல்வாக்கை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்பிய ரகுநாதராயத் தொண்டைமான், தஞ்சை அச்சுத விஜயராகவ நாயக்கரின் படையுடன் சேர்ந்து பல போர்களில் கலந்துகொண்டு தனது வீரத்தை வெளிக்

புதுக்கோட்டை மாவட்ட வரலாறு : டாக்டர் ஜெ.ராஜா முகமது (தமிழக அரசு வெளியீடு)

Sambatiyar



புதுக்கோட்டை பல்லவராயர்களின் வாரிசான மார்தாண்ட பைரவ பல்லவராயர் புதுக்கோட்டை மன்னரான பின் மார்தாண்ட பைரவ தொண்டைமான் என அழைக்கப்பட்டார்! புதுக்கோட்டையின் சிலபகுதிகளை 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கள்ளர் குல பல்லவராயர்களின் வாரிசு 19 ஆம் நூற்றாண்டில் மீண்டும் அரியணை ஏறினார்!

Sambaliyar

புதுக்கோட்டையை ஆட்சி செய்த பல்லவராயர்களின் பங்காளிகளான இவர்கள் அம்புநாட்டில் பிலாவிடுதி கிராமத்தை சேர்ந்தவர்கள்.

இவரது காலத்தில் புதுக்கோட்டை நகரம் பொலிவு பெற்று விளங்கியது. தமிழகத்தில் இரண்டாவது பெரிய அருங்காட்சியமான புதுக்கோட்டை அருங்காட்சியகம் இவரது ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டது.

புதுக்கோட்டை
அருங்காட்சியகம்
அன்புடன் வரவேற்கிறது.
1912 ஆம் ஆண்டு தொண்டைமான் மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய அருங்காட்சியகம்.
இங்கு நீங்கள் காண இருப்பவை
• புதுக்கோட்டை வரலாறு • முதுகெலும்பில்லா பிராணிகள்
(வண்ணத்துப்பூச்சி • நண்டு • பவழம் • நத்தை • சிப்பி)
• பறவைகள் • மீன்கள் • பாம்புகள் • பாலூட்டி பிராணிகள்
• இசைக்கருவிகள் • துணி வகைகள் • கலை, கைவினைப்
பொருட்கள் • ஓவியங்கள் • நாணயங்கள் • தபால் தலைகள்
• மரச்சிற்பங்கள் • தாவரங்கள் • ஆயுதங்கள் • வரலாற்றுக்கு
முற்பட்ட கால பொருட்கள் • செப்பேடுகள் • கல்வெட்டுகள்
• ஓலைச்சுவடிகள் • கற்சிற்பங்கள் • செப்புத்
திருமேனிகள் • கற்கள் • கனிமங்கள்
• படிவப் பொருட்கள் என இன்னும் பல
• காலை 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை திறந்திருக்கும்.
திங்கள்கிழமை, இரண்டாவது சனிக்கிழமை, அனைத்து அரசு விடுமுறை நாட்களிலும் விடுமுறை.
கட்டணம்: பெரியவர் ரூ.5/- சிறியவர் ரூ.3/- [redacted] வெளிநாட்டினர் ரூ.100/-
கண்டு, பயன் பெறுக!
GOVERNMENT OF TAMILNADU
PUDUKKOTTAI MUSEUM
WELCOMES YOU
OPENED IN 1912 BY THE THONDAIMAN RULERS.
SECOND LARGEST MUSEUM IN TAMILNADU.
IN DISPLAY
• PUDUKKOTTAI HISTORY, ART
• INVERTEBRATES - BUTTERFLIES, MOTHS, CRABS,
CORALS, MOLLUSCAN SHELLS.
• BIRDS • FISH • SNAKES • MAMMALS
• MUSICAL INSTRUMENTS • TEXTILES
• ART OBJECTS • HANDICRAFTS • PAINTINGS
• COINS • STAMPS • WOOD CARVING
• BOTANICAL SPECIMENS • ARMS
• PREHISTORIC OBJECTS • COPPER PLATES
INSCRIPTIONS • PALM LEAF MANUSCRIPTS
• SCULPTURES • SOUTH INDIAN BRONZES
• GEOLOGICAL OBJECTS AND MANY MORE
• WORKS ON ALL DAYS : 9-30 AM TO 5-00 PM.
• CLOSED ON : FRIDAY, SECOND SATURDAYS,
THREE NATIONAL HOLIDAYS
• ADULT RS-5/- CHILDREN RS 3/- [redacted]
FOREIGNER RS-100/-
• COME • ENJOY • LEARN

கிபி 1899 ல் மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் ஐரோப்பிய பயணம் மேற்கொண்டு திரும்பியதன் நினைவாக புதுக்கோட்டை டவுன் ஹால் கட்டடம் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டை டவுன் ஹால்

புகழ்பெற்ற புதுக்கோட்டை மன்னர் கல்லூரி இவரது காலத்தில் இறுதி வடிவம் பெற்றது.

மன்னரது மார்த்தாண்ட பைரவ தொண்டைமானின் முயற்சியால் அக்காலத்தில் முதல் பெண்ணாக மன்னர் கல்லூரில் சேர்ந்து படித்த, முத்துலட்சுமி ரெட்டி இந்தியாவின் முதல் பெண் மருத்துவராக உயரந்தார். அக்காலத்தில் ஒரு பெண்ணை கல்லூரியில் அனுமதிக்க பலத்த எதிர்ப்பு எழுந்தபோதும் மாரத்தாண்ட பைரவ தொண்டைமான் தனது ஆதரவு கரத்தை நீட்டி முத்துலட்சுமி ரெட்டியை கல்லூரியில் சேர்த்து, இந்தியாவின் முதல் பெண் மருத்துவராக அவர் உருவாக முக்கிய காரணமாக ,இருந்தார்.

The Pudukottai Gazette quotes: 'It must be said to the credit of the vision and independence of Martanda Bhairava Thondaman, the Raja of Pudukottai, that he overruled all objections and permitted her admission.'

Little did the Raja realise that this girl was going to make history. Muthulakshmi went on to study at Madras Medical College in 1907, again the first female student in the Department of Surgery. She completed her studies in 1912 and became the first woman House Surgeon at the Government Maternity and Ophthalmic Hospital.

6. புதுக்கோட்டை தந்த நன் முத்து டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி

''மங்கையராக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' கவிமணியின் வாக்கிற்கு ஏற்ப தமிழன்னையின் மாதவப் புதல்வியாகத் தோன்றிய டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி, புதுக்கோட்டையில் பிறந்தவர். மங்கையர் குல மாணிக்கமான டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய சமூகசேவகி ஆவார். நலிந்த ஆரதவற்ற பெண்களுக்காக தனது வாழ்வை அற்பணித்துக்கெண்டவர்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி 1886ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாள் புதுக்கோட்டையில் பிறந்தார். இவரது தந்தையார் நாராயணசாமி அய்யர். இவர் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் முதல்வராக பணியாற்றினார். சாதி சம்பிரதாயங்கள் வலுவுடனிருந்த அக்காலத்தில், இசைக்கலையிலே புலமை வாய்ந்த சந்திரம்மா .என்ற பெண்மணியை நாராயணசாமி அய்யர் கலப்புத் திருமணம் செய்துகொண்டார்.இவர்களது தவப்புதல்வியாக தோன்றியவரே டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, அம்மையாரின், உடன் பிறந்தோர் மூவர். சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞராகவும், சமூக தொண்டராகவும் திகழ்ந்த திரு.ராமையா இவரது தம்பி. இசைத் தமிழில் நல்ல புலமைவாய்ந்த சுந்தரம்பாள், சென்னை ராணி மேரிக் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியபெண் என்ற பெருமையையும், சர்வதேச சங்கத்தில் அமைதிப்பணியாற்றிய முதலாவது இந்திய பெண் என்ற பெருமையையும் பெற்ற நல்லமுத்து, இவ்விருவரும் இவரது சகோதரியர். ''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'' என்று கருதிய அக்கால சமுதாயத்தில், எதிர்நீச்சல்போட்டு தனது பள்ளிப்படிப்பை, புதுக்கோட்டை பாலையா பள்ளியிலும், ராணியார் உயர் நிலைப்பள்ளியிலும் முடித்தார், முத்துலட்சுமி.

கல்லூரியில் சேர்ந்து படிக்க விருப்பம்கொண்டு புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் சேர 4.2.1904-ல் விண்ணப்பித்தார். அன்று சமஸ்தான ஆட்சியில் இருந்த அதிகாரிகளுள் சில பழமைவாதிகள், அவரை கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவரை இழித்து பேசினர். ஆனால் பெண்கள் கல்வியில் பெரும் ஆர்வமும், முற்போக்கு சிந்தனையும் கொண்ட அப்போதைய தொண்டைமான் மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் அதிகாரிகளின் மறுப்புகளை தூக்கியெறிந்துவிட்டு முத்துலெட்சுமி அவர்களுக்கு கல்லூரியில் சேர அனுமதி வழங்கினார். (புதுக்கோட்டை தர்பார் பதிவுகள்).

புதுக்கோட்டை நகரத்திற்கு கம்பீர தோற்றத்தை அளிக்கு பொது அலுவலக கட்டடங்கள் கட்டப்பட்டது இவரது காலத்தில்தான். புதுக்கோட்டைக்கு பெருமை சேர்க்கும் புதுக்கோட்டை அரண்மனை(இன்றைய ஆட்சியர் அலுவலகம்) இவரது காலத்தில் கட்டப்பட்டதே.

புதுக்கோட்டை பொது அலுவலக கட்டிடங்கள் புதுக்கோட்டை மன்னர் மார்த்தாண்ட பைரவ பல்லவராயர் சிலை - புதுக்கோட்டை நீதிமன்ற வளாகம்

*மன்னராட்சியில் மக்களாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் சபை அமைக்கப்பட்டு , அவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கும் விதமாக தேர்தலும் நடத்தப்பட்டது.

* கிபி 1902 ல் மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக ராணியார் மருத்துவமனை தொடங்கப்பட்டது.

* முதன்முதலில் விவசாயத்தை ஊக்குவிக்க விவசாய பள்ளிகள் தொடங்கப்பட்டது.

* மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் ஆஸ்திரேலிய பயணத்தின் போது ஆஸ்திரேலிய பெண் ஒருவரை மணந்தார். மக்களின் எதிரப்பை அடுத்து, தனது காதலியே முக்கியம் என பாரீசில் குடியேறி வாழ்ந்து , கிபி 1928 ல் மரணித்தார். இவரது உடல் லண்டனில் வைதீக முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. (manual of pudukkottai state vol 2 part 1 873-890

* அம்புநாட்டில், தென்தெரு குப்பைத்தை சேர்ந்த பல்லவராயர்கள் , கோயில் திருவிழாக்களில் முதன்மை பெறுகின்றனர்.(Hollow crown :Ethinohistory of small kingdom : nicholas dirks 1987)

* அம்புநாட்டில் அரண்மனை மரியாதை ராஜாவான தொண்டைமான்களுக்கு அளிக்கப்பட்டாலும், இனமரியாதை பல்லவராயர்களுக்கே முதன்மையாக அளிக்கப்படுகிறது. அதாவது புதுக்கோட்டை மன்னருக்கு புதுக்கோட்டையிலுள்ள அனைத்து கோயில்களிலும் முதல் மரியாதை உண்டு. அதன்படியே அம்புகோயில் அம்மன் கோயிலிலும் அரண்மனை மரியாதை அளிக்கப்பட்டு, பிறகு தென்தெரு குப்பத்தில் வாழும் பல்லவராயர்களுக்கு முதல் மரியாதை அளிக்கப்படுகிறது. தொண்டைமான்களுக்கு முன் புதுக்கோட்டையை ஆட்சி செய்தவர்கள் எனும் அடிப்படையில் பல்லவராயர்களுக்கு இங்கு முதன்மை அளிக்கப்படுகிறது.Hollow crown :Ethinohistory of small kingdom : nicholas dirks 1987)

never be made, particularly given the lack of a kuppam temple. The Tontaimans would never appear to receive mariyatai in the local temple as Tontaimans (ina mariyatai) but only as rajas (raja mariyatai). Thus apparent contradictions are immediately resolved by resort to a higher domain (that of kingship over kinship) as well as to the higher segment (that of kingdom over kuppam). This process is not just convenient but necessary.

There are many other empirical complexities which should but perhaps never can be fully explained. Like all complexity, they push us further in our search for order and make our acceptance of received structures more difficult. For example, in Ammanipattu, one of the nine kuppams which is located only a few miles to the west of Pilavituti, the Pallavaraiyars receive first honors in the kuppam temple. The explanation for this given by the nattampalam of Ammanipattu is that the Pallavaraiyars are received as honored guests, but this does not happen in other kuppams. What original relationship

போரம் (பெருங்களூரில்) 722 பேர் கொண்ட படைபற்றை நிர்வகித்த பல்லவராயர்கள் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நார்த்தாமலை பகுதியில் ஆவாரங்குடிப்பட்டிக்கு இடம் மாற்றப்பட்டனர். இவர்களுக்கு இங்கு ஒர் அரண்மனை இருந்துள்ளது.

போரம் பல்லவராயர்களுக்கு விழா நாட்களில் புதுக்கோட்டை அரண்மனையில் இருந்து மரியாதைகள் வருவது வழக்கம்.

* பல்லவராயர்களும் முக்கிய விழா நாட்கக

அரண்மனை சென்று மன்னரை சந்தித்து வாழ்த்துக்கள் கூறி வருவது வழக்கம்.

* சர்தார் போரம் பல்லவராயரின் குமாரர் மலையப்ப பல்லவராயர் மற்றும் அண்ணாசாமி பல்லவராயரின் குமாரர் ராமசாமி பல்லவராயர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட மரியாதைகளாக:-குதிரை, கத்தி, இரட்டை தீவட்டி, வாள், குடை, ஈட்டி, கேடயம் , பல்லக்கு, பயல், சவுரி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது.(புதுக்கோட்டை கேசட் 1917 பக்கம் 87) (Structure of social and political relations in little kingdom: Nicholas dirks)

* பெருங்களூர் உருமநாதர் கோயில் சித்திரை திருவிழா பெருங்களூர் நாட்டு கள்ளர் நாட்டார்களால் நடத்தப்படுகிறது.இவர்கள் ஐந்துகரை நாட்டார்கள் என அழைக்கப்படுகிறார்கள். ஐந்துகரை என்பது ஐந்து கள்ளர் குழுமங்களை கொண்டு பிரிக்கப்பட்டதாகும். சிந்துரார், கொம்பியார், கூழியர், சேப்பிளார், பம்பாளியார் ஆகிய ஐந்து பட்டங்களை கொண்ட கள்ளர்களின் தலைமையில் ஐந்து கரை பிரிக்கப்பட்டுள்ளது.இக்கோயிலில் நடைபெறும் திருவிழாவில் பல்லவராயர் முதல் மரியாதை பெற்ற பின் நாட்டார்களுக்கு மரியாதை அளிக்கப்படுகிறது.சித்திரை திருவிழாவின் போது நாட்டார்களுக்கு கச்சை கட்டப்படுகிறது. உருமநாதர் கோயிலை புதுப்பிக்க திருப்பணி தலைவராக துரை குமரப்பன் கூழியர் செயல்பட்டார். இவர் கூழியர் பட்டம் கொண்ட நாட்டார்.(பெருங்களூர் உருமநாதர் கோயில் ஸ்தல வரலாறு சுவடிகள்)

புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை தாலுகா.
பெருங்கநாட்டைச்சேர்ந்த பெருங்களூர் கிராமத்தில் அருள்பாளித்து வரும்
ஸ்ரீ உருமநாதர் ஆலய திருப்பணி விழா
புதுக்கோட்டை திருக்கோவிலைச் சேர்ந்த பெருங்களூர் ஐந்துகரை நாட்டிற்கு
உட்பட்ட அருள்மிகு ஸ்ரீ உருமநாதர், ஸ்ரீ உருமநாச்சியம்மன், ஸ்ரீ அம்மச்சி அம்மன்,
ஸ்ரீ பெரியகருப்பர், ஸ்ரீ சன்னாசியார், ஸ்ரீ பட்டவன், ஸ்ரீ குப்பச்சியம்மன் முத்தாள் ராவுத்தர் மற்றும்
பரிவார தேவதைகளுக்கு புதிதாக சன்னதிகள் கட்டி ஸ்ரீ உருமநாதர் கோவிலுக்கு
ஒரு கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.
துரை குமரப்பன் திருப்பணி நிர்வாகக்குழு தலைவர்
பெருங்களூர் ஐந்து கரை நாட்டார்கள், பெருங்களூர் ஊரார்கள்,
சுற்றுவட்டாரா கிராம பொதுமக்கள்
9786966589



கோவில் கட்டப்பட்ட பின்பு ஒவ்வொரு வருடமும் அருள்மிகு ஸ்ரீ மலையா முருகையனார் சுவாமிக்கும், ஸ்ரீ உருமனார் சுவாமிக்கும், தேர்த்திருவிழா உற்சவம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. சுவாமியின் விருப்பப்படி ஒவ்வொரு வருடமும் சித்திரா பௌர்ணமியன்று திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

மேற்படி திருவிழாவில் பதினெட்டுப் பட்டி என்று சொல்லப்படும் பதினெட்டு கிராமப் பொது மக்களும் கூடி அவர்களுக்கு, ஐந்து கரையாக ஏற்படுத்தி, ஐந்து கரை நாட்டார்கள் என்ற பெயருடன் நியமிக்கப்பட்டு, மேற்படி கோவிலில் திருவிழா காலங்களிலும், கூட்ட விசேடங்களிலும், மற்ற இதர நாட்க்களிலும் முக்கிய பங்கேற்று, படிமாதநார்களுடன் கூட இருந்து திருவிழாவை நடத்தி வந்துள்ளனர். அவ்விதமே இன்றும் நடை பெறுகிறது.

அவ்வமயம் சுவாமிக்கு முதன்முதல் திருவிழா நடத்துகையில் அருள்மிகு ஸ்ரீ மலையா முருகையனார் சுவாமியை இழு தேரில் அமர்த்தி வீதி சுற்றுலா வரும் போது சுவாமிக்கு அதிக உடல் வருத்தம் ஏற்படவே, உடனே அருள்மிகு சுவாமி மேற்படி பூஜகராகிய படிமாத்தானை அழைத்து "அப்பனே இவ்வாறு இழு தேரில் நான் வீதி சுற்றுலா வருவது எனக்கு மிகவும் உடல் வருத்தம் ஏற்படுவதால், இனிமேல் எனக்கு பூந்தேர் ஒன்று அமைத்து அதில் என்னை வீதி சுற்றுலா கொண்டு வர ஏற்பாடு செய் என மொழிந்தருளினார்.

பெருங்களூர் உருமநாதர் கோயில் சுவடிகள்

to the Tanjore Rájás, and, until recently, Kaḷḷars of this section were employed as watchmen in the Tanjore district. A house where a watchman of this section was employed was supposed to be immune from their depredations. Generally speaking, however, the class have now abandoned a life of crime for the less precarious occupation of agriculture, particularly the cultivation of ground-nut.

(*u*) *Kavi Nádu* is the tract of land about Tiruvappúr.

(*v*) *Tirumangala Nádu.*—See under Vísaṅgi Náḍu above. It comprises the Kaḷḷars of Seṅgalúr, Rájápatti and Lakkaḍipatti villages in Kolattúr Taluk.

(*w*) *Perungalúr Nádu* consists of the Kaḷḷars living in the tract bounded by the Váráppúr Náḍu on the East, Kulamaṅgilya Náḍu on the West, Kíl Súrya Náḍu containing Vadaváḷam on the South and Panaṅgáḍu Náḍu on the North. The Kaḷḷars of this Náḍu are divided into fifteen exogamous septs, such as Sépḷán, Sénthirán, Pambáḷi, etc.

Manual of pudukkottai state vol 1

போரம் பல்லவராயர்களின் குல தெய்வம் பெருங்களூரில் உள்ள உருமநாதர் கோயில். பெருங்களூரில் உள்ள புகழ்பெற்ற உருமநாதர் கோயிலில், சித்திரை மாதத்தில் நடைபெறும் திருவிழாக்களில் போரம் பல்லவராயர்களுக்கே முதல் மரியாதை. திருவிழாவின்போது முதல் திருநீர் , பொங்கலுக்கு முதல் பானை, கெடா வெட்டில் முதல் கிடா அனைத்தும் பல்லவராயர்களுக்கே. பெருங்களூரில் உள்ள சோழர்கால சிவன் கோயில், மலைய மருங்கனார் கோயில் என அனைத்து கோயில்களிலும் போரம் பல்லவராயர்களுக்கே முதல் மரியாதை. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உருமநாதர் கோயிலில் மூலவரை நோக்கியவாரு நேர்கோட்டில் யானை மற்றும் குதிரை சிலைகளை வைக்கும் உரிமை பல்லவராயர்களுக்கே உண்டு.(மன்னர் காலத்தில் வைக்கப்பட்ட பழைய சிலைகள் சிதிலமடைந்து விட்டது) யானை மற்றும் குதிரைகளை கட்டும் பணி விரைவில் தொடங்க உள்ளது. கம்மங்காடு எனும் ஊரில் பல்லவராயர் காளி எனும் ஒரு காளியையும் பல்லவராயர்கள் வழிபட்டு வருகின்றனர்.(பெருங்களூர் உருமநாதர் கோயில் தலைமை பூசாரி :- மணி அய்யர், 23 தலைமுறைகளாக உருமநாதர் கோயிலில் பூசாரிகளாக இருப்பவர்கள்)

Army. The State did not maintain any considerable standing-army. The Sardàrs and Śervaikàrs, who enjoyed rent-free lands, maintained almost all the cavalry and infantry. For instance, we read in old records that Pórum Ràyan Pallavaràyar and his brothers maintained 722 men, and Ràmasvàmi Ràṅgiya Tévar, 130 men armed with swords and about 210 with match-locks. The men received training under capable officers.• They were often trained by English officers before they were sent for active field service. Col. Stuart in his letter dated March 28, 1789, requested the Toṇḍaimàn to "direct his men to march so as to arrive on Tuesday at Tripatoor," and informed him that "he would have them well inculcated in the articles of war, after their arrival at the place aforesaid."

ஆவரங்குடிப்பட்டி சர்தார் இல்லத் திருமண விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகரும் பங்களாதேயான கயற்றி கர வருடம் ஆனி மாதம் 25-ஆம் தேதி (10-7-2011) ஞாயிற்றுக்கிழமை நாளையும், ரவாரி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7-30 மணிக்குமேல் 9-00 மணிக்குள் சிறிய மேஷ லக்னத்தில்

தெய்வத்திரு. 'மாட்சிமை தங்கிய மாமன்னர்' பிரகதம்பாள்தாஸ் இராஜ இராஜகோபால தொண்டைமான் அவர்கள்

தெய்வத்திரு. A.R. அண்ணாச்சாமி பல்லவராயர் ஆகியோர்களின் நல்லாசியுடன்...

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, ஆவரங்குடிப்பட்டி (ஏ) நடராஜனும் A.R. சின்னையா பல்லவராயர் - ஜெயலெட்சுமி இவர்களின் குமாரன் திருநிறைச்செல்வன் சர்தார். C. முகேஷ் (எ) இராஜேந்திரன் B.Sc.,I.T.,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒஞ்சியத்தில், V. முத்து தேவர் - விஜயா இவர்களது குமாரத்தி திருநிறைச்செல்வி M. கனிகா B.Com.,

இருவருக்கும் திருமணம் செய்வதாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி திருமணம் பழனி ஸ்ரீ முருகப்பெருமான் சன்னதியில் (ஸ்ரீ முருகன் திருமண மண்டபம், மதுரைரோடு) நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

வேண்டுகோள்

V. முத்து தேவர் – விஜயா
V. துரை தேவர் – கமலா
V. சர்குணம் – பாரதி. ஒஞ்சியத்தில்.

குறிப்பு: ஆனி மாதம் 29-ஆம் தேதி (14-7-2011) வியாழக்கிழமை பகல் 11-30 மணியளவில் கிரனூர் D.S.P. திருமண மஹாலில் வரவேற்பு, விருந்து நடைபெறும்.

தங்கள் அன்புள்ள,
சர்தார். AR. சின்னப்பா பல்லவராயர்
சர்தார். A. ஜானகிஅம்மாள் அண்ணாச்சாமி பல்லவராயர்
சர்தார். AR. சின்னையா பல்லவராயர்
சர்தார். AV. நடராஜன் பல்லவராயர்
சர்தார். K. வையெயந்தி குழந்தையா பல்லவராயர்
சர்தார். C. சண்முகம் பல்லவராயர், B.A.,
சர்தார். C. சக்திவேல் பல்லவராயர், B.Com.,
சர்தார். K. முத்துக்குமார் பல்லவராயர், D.M.E.,
ஆவரங்குடிப்பட்டி (அ) நடராஜனும்.

பெருங்களூர் பல்லவராயர்கள் வழியினர் கிபி 1700 க்கு பின் புதுக்கோட்டை தொண்டைமான் படையில் பணியாற்றி கிபி 1750களில் 722 பேர் கொண்ட படையை வைத்து தனி படைபற்றை நடத்தும் அளவுக்கு உயர்ந்தனர். இவர்கள் போரம் பல்லவராயர்கள் என குறிக்கப்பட்டனர். போரம் பெருங்களூரில் உள்ள ஒரு பகுதியின் பெயராகும்.18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நார்த்தாமலை அருகில் ஆவாரங்குடிப்பட்டி எனும் ஊரை மையமாக கொண்ட 7 கிராமங்களை தொண்டைமான் மன்னர் பல்லவராயர்களுக்கு அளித்தார். பெருங்களூர் பல்லவராயர்கள் ஆவாரங்குடிப்பட்டியில் குடியேறி வாழ்கின்றனர். பெருங்களூரில் பல்லவராயர்களின் 1000 ஏக்கர் அளவுள்ள நிலப்பகுதி இன்றும் உள்ளது. பெருங்களூரில் பல்லவராயர்கள் வழிப்படும் பல்லவராயர் காளி, பல்லவராயர் காணி, பல்லவராயர் குளம் முதலியவை உள்ளன. பெருங்களூரில் உள்ள உருமநாதர் ஆலயம், சிவன் கோயில், பிடாரி கோயில் ஆகிய கோயில்களில் பல்லவராயர்களே முதல் மரியாதை பெற்று வருகின்றனர். 22 தலைமுறையாக அங்கு வாழும் அர்ச்சகர் குடும்பத்தினர் இதற்கு சாட்சியாக உள்ளனர். Sambatiyar

தனியான தாள்
14-3-27ன் வெளிவந்தது.

2

புகழ்பெற்ற தலைமைப் பதிப்பு நிலைய
அலுவலருக்கு.

நமது வாழ்நாளை இனிது கழிப்பதற்காக, முயன்றும் உழைத்தும், நாம் ஈட்டிய பொருளை நம்முடைய பிள்ளைகளுக்கோ, பேரப் பிள்ளைகளுக்கோ, அல்லது வேறு யாருக்கோ, அதிகமாகச் சேர்த்து வைத்துவிட்டுப் போவதைவிட, நாம் இருக்கும் போதே அதை நல்ல முறையில் செலவழித்து விட்டுப் போவதே சிறந்தது என்பது என் கொள்கை. அதனால் தான் நான் என் வாழ்நாளில் பெரும் பகுதியை பொதுத் தொண்டிலேயே செலவழித்து வந்திருக்கிறேன். அதனால் என் குடும்பத்தாருக்கு நான் ஒன்றும் சேர்த்து வைக்கவில்லை. ஆனால் அதற்காக நான் வருந்தவில்லை. அவர்களும் என் கொள்கையை மதித்து நடந்து வருகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றும் சேர்த்து வைக்காமல் போனதற்காக அவர்களும் என்னைக் குறை கூறுவதில்லை. அவர்களுக்கு வேண்டிய அளவு வருவாய் வரும்படியான ஏற்பாடுகளை நான் செய்திருக்கிறேன். அதனால் அவர்களும் மனநிறைவுடனேயே இருக்கிறார்கள். எனது கொள்கையிலுள்ள, முக்கியமான, முடிவான ஒரு விஷயத்தை அதனுடைய அடிப்படையில் தான் நான் இதுவரை நடந்து வந்திருக்கிறேன் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதாவது, எனக்கு மேலே ஒரு பெரிய தொகை [illegible] இருந்தாலும் சரி, அதற்கு மேல் ஒரு சல்லிக் காசு கூட நான் சேர்த்து வைக்கக் கூடாது என்பதுதான் அது. அதாவது, என்னுடைய மரணத்தின் போது என்னிடம் ரூபாய் 500 தொகைக்கு மேல் இருக்கக் கூடாது என்பதுதான் அது.

அதற்காக நான் [illegible] எனது சொந்த விஷயத்திற்காகவோ, அல்லது பொது விஷயத்திற்காகவோ, ரூபாய் 500 தொகைக்கு மேல் செலவழிக்கக் கூடாது என்பதல்ல. அதற்கு மேல் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதை நான் தாராளமாகச் செலவழிக்கலாம். ஆனால் அதற்காக நான் ஒரு சல்லிக் காசு கூட சேர்த்து வைக்கக் கூடாது என்பதுதான் அது.

(1) இந்த விஷயத்தில் நான் முழுக்க முழுக்க என் சொந்த விருப்பத்தின் பேரிலேயே நடந்து வந்திருக்கிறேன். அதனால் வேறு யாரும் இதில் தலையிட்டு ஆலோசனை கூறுவதை நான் விரும்பவில்லை.

(2) [illegible]

பல்லவராயன் காளி
" பெருங்களூர் நாட்டு ஐந்து கரை நாட்டார்களில் ஒரு குழுவான சிந்துரார்கள் வாழும் கம்மங்காடு எனும் ஊரில் வழிபடப்படும் " பல்லவராயன் காளி" ! பெருங்களூரில் வாழ்ந்த பல்லவராயர்கள் கிபி 1770 ல் நார்த்தாமலை பகுதிக்கு குடிபெயர்ந்து விட்டனர்! அவர்களால் வணங்கப்பட்ட காளி குடிகொண்டுள்ள மரம் இன்றும் பல்லவராயன் காளி என அழைக்கப்படுகுறது! வருடம் ஒரு முறை பெருங்களூர் பல்லவராயர்கள் வந்து வணங்கி செல்கின்றனர்!
Sambatiyar

தெய்வத்திரு. M.ராஜேந்திரன் வெட்டுவார் இல்ல
திருமண விழா
இடம்:
ஸ்ரீ உருமநாதர் திருமண மண்டபம்,
நாள்: 24.08.2020
மணமக்கள்
ரா.அமர்நாதி B.Sc.,
ம.புவனேஸ்வரி M.E.,
எங்கள் இல்ல
திருமண விழாவிற்கு
வருகை தரும்
Ex.M.L.A.,
விஜய ரவி பல்லவராயர்
வருக! வருக!! என
அன்புடன்
வரவேற்கின்றேன்...
பெருங்களூர்...

* பெருங்களூரில் இருந்து நார்த்தாமலையை அடுத்த ஆவாரங்குடிப்பட்டியை சுற்றியுள்ள 10 கிராமங்கள் இவர்களுக்கு தொண்டைமானால் அளிக்கப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் படை தளவாடங்களுடன் அங்கு குடியேறினர். நார்த்தாமலை முத்து மாரியம்மன் கோயிலில், இன்றும் பெருங்களூர் பல்லவராயர்களுக்கே முதல் மரியாதை. நார்த்தாமலை அம்மன் கோயிலில் ஆறாம் மண்டகப்படி பல்லவராயர்களுக்கு உரியதாகும். ஆறாம் மண்டகப்படியின் போது மட்டுமே, காளை வாகனம் தேரில் வைத்து கோயிலை சுற்றி இழுத்து வரப்படுகிறது. ஆகாச ஊரணி எனும் இடத்தில் இருந்து சாமி கொண்டுவரப்பட்டு ஆறாம் மண்டகப்படி அன்று கோயிலை சுற்றி வலம் வரும் . (சர்தார் முத்துக்குமார் பல்லவராயர் : லெக்கணாப்பட்டி தலைவர், ஆவாரங்குடிப்பட்டி)

* இது தவிர இலுப்பக்குடிப்பட்டியில் உள்ள குளவாய் கருப்பர் கோயிலிலும் பல்லவராயர்களே முதல் மரியாதை பெறுகின்றனர். (சர்தார் முத்துக்குமார் பல்லவராயர் : லெக்கணாப்பட்டி தலைவர், ஆவாரங்குடிப்பட்டி)

* போரம் பல்லவராயர்கள் சர்தாராக இருந்தபோது, தொண்டைமான் மன்னர் காலத்தில் அவர்களுக்கு சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டு இருந்தது. அவற்றில் குறிப்பிடத்தக்கதாக, குற்ற வழக்குகளில் ஒருவேளை பல்லவராயர்கள் குற்றம் சாட்டப்பட்டால் நீதி விசாரணையின் போதோ, நீதிமன்றங்களிலோ இவர்கள் உட்கார அனுமதிக்கப்படுவர். நிற்க வேண்டிய அவசியமில்லை. அக்காலத்தில் இது மிகப்பெரிய மரியாதையாகும்.(803/1916) pudukkottai darbar letter)

PUDUKKOTTAI DARBAR

PROCEEDINGS OF THE PUDUKKOTTAI DARBAR,

~~P. C.~~ / Dis. No. 803 / C of 1916., dated 9-5-1916.

Read—the following papers :—

The Superintendent of Stationery & Printing is requested to publish the following notification in the State Gazette.

Notification.

Under the command of His Highness it is hereby notified that Annasamy Pallavarayar son of the late Annasamy Pallavarayar of Ayyan Adiyilai is a Sirdar as a [illegible], but is exempted from personal appearance in Civil Courts under section 133 of the new Code of Civil Procedure and that he will be allowed seats before Criminal Courts even when accused of grave crimes till he is convicted.

(Sd) V.R. Durai Rajah
Dewan

- - - - -

By order

[illegible]
Registrar.

To

The Press Superintendent

Copy to petitioner.

P.K.11-4-16.

11-5-16

PUDUKKOTTAI STATE DARBAR OFFICE

கிபி 1839 ல் ஜாகிர்தார் ரங்கன் பல்லவராயர் வசம் 11 கிராமங்கள் இருந்துள்ளது(Gazettee of pudukkottai district by Gandhi 1983)

Rangam Pallava Row's Jagir and Ranganatha Panrikondar's Jagir had been granted to the sons-in-law of the Raja Raghunatha Tondaiman (1825–1839). The Ammani Raja Estate was granted to the first daughter of Raja Raghunatha Tondaiman (1825–1839). The extent of land covered by these Jagirs as they stood in 1839 was as follows:—

	Number of villages.	*Extent in. (Velis).*
(i) Western Palace Jagir ..	10	1,982
(ii) Chinnaranmanai Jagir ..	19	1,627
(iii) Manovirthi Jagir	16*	771
(iv) Rangam Pallavarow's Jagir.	11	849
(v) Ranganatha Panrikondar .. Jagir.	4	717
(vi) Ammani Raja Estate ..	4	318
	64	6,264

The fact that out of the total extent of 36,997 *Velis* of land alienated, 6,264 acres of land were in the hands of members of royal family goes to show how freely the powers of management of land were used for the family.

கிபி 1839: " புதுக்கோட்டை சமஸ்தானத்தில் , மன்னர் குடும்பத்தாரின் வசம் 64 கிராமங்கள் இருந்தது. ராஜா ரகுநாத தொண்டைமானின் மருமகனான, ரங்கன் பல்லவராயர் வசம் 11 கிராமங்கள் இருந்தது"

Gazetter of pudukkottai district :1983

Sambaliyar

பல்லவராயர்கள் வழிவந்த விஜய ரகுநாத பல்லவராயர் கறம்பக்குடி சேர்மனாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு , தன்னலமின்றி பல சேவைகளை செய்துள்ளார். அவரது பொது நலத்தொண்டால் பலனடைந்த பொது மக்கள் தங்களது சொந்த செலவிலேயே பல்லவராயருக்கு சிலை வைத்து வருடா வருடம் அவரது பிறந்தநாளில் விழா எடுத்து வருகின்றனர்.

கல்விக் காவலர்,
மனித நேய மாண்பாளர், நீதி அரசர்
அமரர் துரை.விஜயரெகுநாத பல்லவராயர் அவர்களின்
19-ஆம் ஆண்டு நினைவு நாள்
விழா அழைப்பிதழ்
பேரன்புடையீர், வணக்கம்.
மனிதநேய மாண்பாளர் அமரர் துரை.விஜயரெகுநாத பல்லவராயர்
அவர்களின் 19-ஆம் ஆண்டு நினைவு விழா 11.12.2.2018 ஆகிய இரு தினங்கள்
நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி பல்லவராயர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற உள்ளது.
தாங்கள் விழாவில் கலந்து கொண்டு விழா சிறக்க ஒத்துழைப்பு நல்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் :
அமரர் துரை. விஜயரெகுநாத பல்லவராயர்
மணிமண்டபக்குழு - கறம்பக்குடி.



மனித நேய மாண்பாளர் அமரர் அய்யா,
துரை.விஜயரெகுநாதபல்லவராயர்.
அவர்களின் திருவுருவ சிலை திறப்பு விழா
நாள் : 11 - 2 - 2000 — இடம்: கறம்பக்குடி.
திறப்பாளர்
மாண்புமிக தமிழக முதல்வர்,
டாக்டர். கலைஞர். அவர்கள்
தலைமை : உயர்திரு. முன்னாள் மத்தியமைச்சர்
வாழப்பாடியார். அவர்கள்.
முன்னிலை : புதுகை நாடாளுமன்ற உறுப்பினர்,
எஸ்.திருநாவுக்கரசு M.A.B.L, அவர்கள்
வரவேற்புரை: புதுகைமாவட்ட தி.மு.க செயலாளர்,
க.சிதம்பரம். அவர்கள்.

ஸ்ரீ முத்துக் கருப்பையா சுவாமி
ஆலய நுழைவுவாயில் திறப்புவிழா
26.4.1995
கறம்பக்குடி.
திறப்பாளர்
திரு. துரை. விஜயரெகுநாத
பல்லவராயர் அவர்கள்.
Ex. ஊராட்சி ஒன்றியம் வழுத்தலைவர். கறம்பக்குடி
உபயம்:
திரு. M. மாரிமுத்து & சன்ஸ்.
(Ex. V.H.M.) கறம்பக்குடி.
திரு. மு. செல்லத்துரை & சன்ஸ்.
திரு. குழ. சந்திரசேகரன் & சன்ஸ்.

Kṣetrapāla or the "guardian of the temple".

Pallattividuti.—(*Paḷḷattiviḍuti*; *Firka–Álaṅguḍi*; *Distance* 15½ *miles*; *Population 1,196*) is one of the principal seats of the Álaṅguḍi Nàṭṭu Kaḷḷars.

Pallavaranpattai.—(*Pallavarán̆pattai*; *Firka–Maḻaiyúr*; *Distance* 20½ *miles*; *Population 2,092*). There are two temples here, Sunayàkóvil which is dedicated to Śiva, and Paṭṭavankóvil.†

Perungalur.—(*Peruṅgaḷúr*; *Firka–Várápp̆úr*; *Distance 11 miles*; *Population 2,324*)—called in inscriptions, Perungóḻiyur or Kóḻi,‡ lies on the Pudukkóṭṭai-Tanjore road. Near it flows

---

• See page 697.

† "The Spirits of those who have died violent deaths are often worshipped under the name of *Paṭṭavans*, by the family of the deceased" (Hemingway: *Trichinopoly Gazetteer*). Heroes and martyrs are also worshipped as *Paṭṭavans*, and temples are built in their honour.

‡ Evidently after Uraiyur, the old Cóḻa capital, which was also called *Kóḻiyúr*.

Manual of pudukkottai state vol 2 part 2

விஜய ரகுநாத பல்லவராயர் (1872-1930) ரீஜன்ட்
புதுக்கோட்டை சமஸ்தானம்

தொண்டை மண்டலத்தில் இருந்து புதுக்கோட்டை பகுதிக்கு குடியேறிய பல்லவராயர்கள் தனி ராஜ்ஜியத்தை உருவாக்கி ஆண்டுள்ளனர். நாட்டுக்கும் மக்களுக்கும் ஆபத்து வரும்போதெல்லாம் போர்களத்தில் வீர தீரம் காட்டியுள்ளனர். தங்களது முடியாட்சி முடிவடைந்த பின்பும், பெரிய படைபற்றை உருவாக்கி தொடர்ந்து உதிரம் சிந்தியுள்ளனர். புதுக்கோட்டை வரலாற்றில் பல்லவராயர்களின் சாதனைகள் மணிமகுடமாக திகழும்.

Article by : www.sambattiyar.com

http://www.sambattiyar.com/facts-of-pichavaram-kavalgar/